# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

Sessions Case No.66/2006

Deposition of witness – PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | தரணிதேவி | Caste | : | |
| W/o. | : | முத்து | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed on 01.11.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused absconded and declared as proclaimed offender on 09.06.2025 and NBW pending from 27/02/2006.

முதல் விசாரணை;

நான் மல்லசமுத்திரம் பாலமேட்டில் குடியிருக்கிறேன். வழக்கில் இறந்துபோனவர் எனது மகள் சுகவனேஸ்வரி ஆவார். என்னுடைய மகளை பரமசிவம் என்ற எனது உறவினருக்கு சம்பவத்திற்கு 8 மாதத்திற்கு முன்னர் திருமணம் செய்து கொடுத்தோம். எனக்கு 2 மகள்கள், மற்றும் ஒரு மகன் உள்ளார்கள். இறந்துபோன சுகவனேஸ்வரி எனக்கு 2வது மகள் ஆவார்.

திருமணத்திற்கு பிறகு எனது மகளும் பரமசிவமும் பள்ளிபாளையம் அருகில் உள்ள வண்ணாம்பாறையில் குடியிருந்து வந்தார்கள். அடிக்கடி எனது மகளிடம் பரமசிவம் தகராறு செய்ததால் சீரகாபாடிக்கு அழைத்து வந்து குடி வைத்தோம். ஆடி பண்டிகைக்கு எனது மகளையும் மருமகனையும் அழைப்பதற்காக சென்றேன். எனது மருமகன் வேலைக்கு சென்று விட்டு வரும்வரை காத்திருந்தேன்.

இரவு 11.00 மணிக்கு வந்தவரை எனது மகள், எனது அம்மா காத்து;fகொண்டிருக்கிறார், ஏன் இவ்வளவு நேரம் கழித்து வருகிறாய் என்று கேட்டார். அதற்கு எனது மருமகன் என் மகளை வீட்டிற்குள் அழைத்து சென்று இரும்பு பைப்பால் கழுத்தில் அடித்துள்ளார். அய்யோ, அம்மா என்று என் மகள் சத்தம் போட்டார். நான் உடனே உள்ளே சென்று பார்த்தேன். அப்போது என் மகளின் பின் தலை மற்றும் கழுத்தில் ரத்தம் வந்தது. பின்னர் என்னுடைய சொந்தக்காரர் மாரிமுத்து கொஞ்ச நேரத்தில் வந்தார். பின்னர் அவரை அழைத்துக்கொண்டு ஆட்டையாம்பட்டி காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். அதன்பின்னர் போலிசார் வந்து என் மகளின் பிரேதத்தின் மீது விசாரணை நடத்தினார்கள். என் மகளை அடித்த இரும்பு பைப்பை என்னால் அடையாளம் காண்பிக்க முடியும். என்னிடம் காண்பிக்கப்படும் இரும்பு பைப்தான் என் மகளை என் மருமகன் அடிக்க பயன்படுத்திய இரும்பு பைப் ஆகும். அது சா.பொ.1 ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

தற்போது மேற்படி பரமசிவம் எங்கிருக்கிறார் என்று தெரியவில்லை. கொலை நடந்த பிறகு தலைமறைவானவர் இன்றுவரை

**எங்கிருக்கிறார் என்று தெரியாது.**

Sd/- S.Sumathy,
Principal Sessions Judge, Salem.